‘சன் நியூஸ்’ குணசேகரன் தொடங்கி வைக்கிறார்! ஆனி இராசா பரிசுகள் வழங்குகிறார்!

# கொளத்தூர் தொகுதியில் மாபெரும் அறிவுத் திருவிழா: வினாடி - வினா நிகழ்ச்சிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, மார்ச் 20 -

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. கொளத்தூர் சட்டமன்ற தொகுதி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் - 32, 32ஆ, “தளபதி 72 அறிவு களம்” எனும் தலைப்பில் வினாடி வினா போட்டி 22.03.2025 சனிக்கிழமை அன்றும், மாலை 4.00 மணியளவில் அரையிறுதி போட்டியும், 23.03.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் இறுதிப்போட்டியும் சென்னை, பெரியார் நகர், மெட்ரிக்குலேசன் பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மற்றும் இந்தியாவிற்கே வழிகாட்டியாக விளங்கும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளைச் சிறப்பிக்கும் வகையில் “தளபதி 72 அறிவு களம்” எனும் மாபெரும் வினாடி வினா போட்டி நடைபெற உள்ளது.

திராவிட இயக்க வரலாறு, திராவிட இயக்க அரசியல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை, திட்டங்கள், தளபதி அவர்களின் பொது வாழ்க்கை, அவர் மக்களுக்காற்றிய தொண்டு, தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்த நலத் திட்டங்கள் என ஒட்டுமொத்த திராவிடக் களஞ்சியத்தின் திராவிடச் சுடரைத் தேர்ந்தெடுக்கும் “மாபெரும் அறிவுத்திருவிழாவாக” நடைபெறும் இப்போட்டி இணையவழியாக மார்ச் 3 முதல் 12 வரை நடைபெற்று 22.03.2025 அன்று அரையிறுதியும்,



23.03.2025 அன்று இறுதிப் போட்டியும் சென்னை கொளத்தூரில் மிக பிரமாண்டமாக நடைபெறுகிறது.

இவ்வினாடி வினா நிகழ்ச்சியின் முதல் நாள் போட்டியை சன்நியூஸ் தலைமை ஆசிரியர் மு.குணசேகரன் துவக்கி வைத்து நிகழ்ச்சியை கண்டு மகிழ்கிறார்.

இரண்டாம் நாளில் நடைபெறும் இறுதிப்போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு இந்திய தேசிய பெண்கள் கூட்டமைப்பு பொதுச்செயலாளர் ஆனி இராசா பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி, இரா.கிரி ராஜன் எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.எ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், இரா.விடுதலை, பகுதிச் செயலாளர்கள்: ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: கே.சந்துரு, சி.மகேஷ்குமார் மற்றும் தேவஜவகர் சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: துரை கண்ணன், அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக் எஸ்.தனசேகர்.

மாமன்ற உறுப்பினர்கள்: சி.ஸ்ரீதணி, என்.தாவூத் பீ. டி.யோகப்பிரியா, பி.அமுதா. கே.சாரதா. பகுதி நிர்வாகிகள்: பி.பழனி, இரா.இளங்கோவன், எஸ்.கே.ரமேஷ், எல்.டி.தாமஸ். இரா.தயாளன், எம்.சாக்ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி.

வட்ட கழக செயலாளர்கள்: பா.அன்பரசு, டி.சந்திரசேகர், கே.ஜார்ஜ் குமார், என்.பொன்முடி பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, பி.டி.சி.எஸ்.ரவி. எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என்.பவுல் ராஜ், என். இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! இராஜேஸ்வரி ஸ்ரீதர் தலைமை!

# எழும்பூர் தெற்குப் பகுதியில் ‘மனித நேய விழா’ பட்டிமன்றம்!

## அமைச்சர் ஆர்.காந்தி தொடங்கி வைக்கிறார்! நடுவர் - ராஜா!

சென்னை, மார்ச் 20 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனித நேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 31, கற்போர் நிகழ்த்தும் சொற்போர்! கழகத்தின் வழியில் நிற்போம்!! எனும் தலைப்பில் சென்னை கிழக்கு மாவட்ட திமுக விவசாய அணி சார்பில் மாபெரும் புகழரங்கம் நாளை (21.03.2025 வெள்ளிக்கிழமை) மாலை 6.00 மணியளவில், சென்னை, புரசைவாக்கம், ஒய்.எம்.சி.ஏ டவுட்டனில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி தலைமை வகிக்கிறார். மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர் பாபு, கோ.ஏகப்பன், வி.சுதாகர், சொ.வேலு எம்.சி, கே.எஸ்.எம்.நாதன், புனிதவதிஎத்திராசன் எம்.சி, ப.ஸ்ரீராமுலு எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி, சுதாதீனதயாளன் எம்.சி, சாவித்திரிஸ்ரீவீரராகவன், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, எல்.சுந்தர்ராஜன் எம்.சி, பரிதிஇளம்சுருதி எம்.சி, கே.அண்ணபூரணி, கே.வள்ளி, ஆர்.கிருஷ்ணவேணி, எஸ்.விஜயலஷ்மி, கே.எம்.ஸ்நோபா, ஜெ.தேவகிருபை, எஸ்.ஜான்சிராணி, சகினாபேகம், சூர்யாரகு, ஜி.ஜெயசூர்யா, அமுல் பாண்டியன், யு.இலக்கியா, எம்.எழில், எஸ்.விஜயலஷ்மி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வி.விஜயகுமார், ஆர்.ப,ஆ.சுகந்தி, ஜா.ஞானதீபம், புனிதாமோகன், வி.நதியா வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் பட்டிமன்றம் துவக்கி வைப்பவர் கைத்தறி (ம) துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, பட்டிமன்ற நடுவர் ராஜா, முதலமைச்சர் வெற்றி அடைய பெரிதும் உதவுவது வேகமா எனும் தலைப்பில் அருள்பிரகாஷ், அருண், ஆகியோரும், விவேகமா? எனும் தலைப்பில் திருமதி.அனுகிரகா, ராகவேந்திரன் ஆகியோரும் பேசுகின்றனர்.

இப்புகழரங்கத்தில் மேயர் ஆர்.பிரியாராஜன், தயாநிதிமாறன் எம்.பி, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, கே.எஸ்.இரவிச்சந்திரன், பி.எம்.யாழினி, ப.ரங்கநாதன், பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தமிழன்பிரசன்னா, எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், சங்கரிநாராயணன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, தேவஜவஹர், ஜி.மகாதேவன், இசட்.ஆசாத், கூ.பி.ஜெயின், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வே.வாசு, வ.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ். புரசை கோ.மணி, க.நந்தீஸ்வரன்,

எஸ்.பன்னீர்செல்வம், த.வ. செம்மொழி, பி.ஜெ.துளசிங்கம், பி.உதயசங்கர், வி.ரமேஷ், எம்.இப்ராஹிம் கனி, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா, இரா.கலைச்செல்வி. எம்.தாவூத்பீ, கே.சாரதா, லதாவாசு, எல்.ரமணி, எஸ்.தமிழ்செல்வி, டி.யோகபிரியா, பி.அமுதா, எஸ்.உமா, சி.ஸ்ரீதேவி, என்.உஷாநாகராஜ், கே.பொற்கொடி, மு.சரவணன், எம்.கமல், எம்.இ.சேகர், பி.பரிமளம், ராஜேஸ்ஜெயின், ரமேஷ்(எ) நீலகண்டன், டி.லோகேஷ், ஜெ.பால முருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், ஜி.ஜெ.பிரபு, எஸ்.தனசேகர்,

ஆர்.டி.சங்கர்நானா, வானவில் விஜய், புரசை ஜி.தாமோதரன், நா. துலுக்காணம், எம்.பெரோஸ்கான், எல்.பி.எப்.மோகன், துரைகண்ணன், பி.விஜயகுமார், எம்.விநாயகம், ஆர்.எஸ்.சித்திக், க.பா.பிர தீப்குமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இப்புகழரங்கதில் அ.நிர்மலாதேவி நன்றி கூறுகிறார்.

ரூ.35 லட்சத்தில் 176 வது வார்டு மாமன்ற உறுப்பினர்

# வே.ஆனந்தன் வார்டு மேம்பாட்டு நிதியில் உடற்பயிற்சிக் கூடம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்!

சென்னை, மார்ச் 20 -

ரூ.35 லட்சத்தில் வேளச்சேரி 176-வது வார்டு மாமன்ற உறுப்பினர் வே.ஆனந்தன் வார்டு மேம்பாட்டு நிதியில் உடற்பயிற்சிக் கூடத்தை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று திறந்து வைக்கிறார்.

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்குப் பகுதி மண்டலம் 13 - 176-வது வார்டில் வார்டு மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி வே.ஆனந்தன் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் உடற்பயிற்சி கூடம் திறப்பு மற்றும் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையத்தின் அடிக்கல்நாட்டுதல் நிகழ்ச்சி இன்று (20-03-2025 வியாழக்கிழமை) மாலை 5.00 மணி ஆண்டாள் நகர், 2வது பிரதான சாலை, வேளச் சேரியில் நடைபெறுகிறது.

மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் விழாவிற்கும் வருகை தந்து மக்கள் நலப் பணிக்கு அடிக்கல் நாட்டியும், திறந்தும் வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ஹசன் மௌலானா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக் குழு தலைவர் இரா.துரைராஜ், பகுதி செயலாளர் அரிமா சு.சேகர், வேளச்சேரி மேற்கு பகுதிக்கு உட்பட்ட பகுதி நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சார்பு நிர்வாகிகள், கழகத் தோழர்கள் திரளானோர் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை, விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாவட்ட அமைப்பாளரும் மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி வே.ஆனந்தன் செய்துள்ளார்.

புதுச்சேரி அரசுப் பள்ளி சிறப்பு

# ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா வலியுறுத்தல் !

புதுச்சேரி, மார்ச் 20-

புதுச்சேரி சட்டப்பேரவையில் இன்றைய பூஜ்ஜிய நேரத்தில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா பேசியதாவது:-

புதுச்சேரி அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த சிறப்பு குழந்தைகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக நான்கு பிராந்தியங்களிலும் கடந்த 14 ஆண்டுகளுக்கு முன்பு அரசு மூலம் தேர்வு செய்த 24 சிறப்பு ஆசிரியர்கள் ஒப்பந்த முறையில் பணியாற்றி வருகிறார்கள்.

அவர்கள் தங்கள் நிலையை அரசிடம் எடுத்துச் சொல்லி தங்களை பணி நிரந்தம் செய்ய தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர். மேலும், ஓய்வூதிய வயதை எட்ட இன்னும் சில ஆண்டுகள் உள்ள நிலையில் பணியாற்றும் ஒப்பந்த சிறப்பு ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய சட்டமன்றத்தில் நாங்கள் கோரிக்கை வைத்தபோது, முதல்வர் அவர்கள் அவர்களை பணி நிரந்தரம் செய்வதாக உறுதியளித்தார். ஆனால் இன்று வரை அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை.

சிறப்பு ஆசிரியர்களை பணிநிரந்தரம் செய்ய வேண்டும் என்று அனைத்து மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உச்ச நீதி மன்றம் சமீபத்தில் உத்தரவிட்டுள்ளது. அதன் அடிப்படையில் சிக்கிம், நாகாலாந்து, மணிப்பூர், அருணாச்சல பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் சிறப்பு ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்துள்ளது.

ஆனால் புதுச்சேரி அரசு தீர்ப்பின் அடிப்படையில் கண், காது, நரம்பு, மூளை வளர்ச்சி குறைபாடு உள்ள குழந்தைகள் உள்ளிட்ட பல்வேறு பிரிவு சிறப்பு குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்க 160 சிறப்பு ஆசிரியர்களை நிரப்புவதற்கான ஆர் ஆர் டிராப்ட் வெளியிடப்பட்டுள்ளது. இதனால் ஏற்கனவே பணியாற்றும் தங்களின் நிலை குறித்து சிறப்பு ஆசிரியர்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

ஆகவே, அவர்களின் அச்சத்தை போக்கும் வகையில் புதுச்சேரி அரசு 24 சிறப்பு ஆசிரியர்களையும் கருணை அடிப்படையில் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று இந்த அவையின் வாயிலாக வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (19.03.2025) பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பள்ளிக் கல்வித் துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக தேர்வு செய்யப்பட்ட 217 இளநிலை உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அரசு உயர் அதிகாரிகள்திருமதி எஸ்.ஜெயந்தி, முனைவர் பொ.சங்கர், முனைவர் ச.கண்ணப்பன், முனைவர் பெ.குப்புசாமி, டி. ராஜேந்திரன், புகழேந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


மாவட்டப் பொறுப்பாளர் டி.பழனிவேல் தலைமையில்

**தஞ்சை தெற்கு மாவட்டப் பொறியாளர் அணி ஒன்றிய - நகர - பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல்!**

மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

தஞ்சாவூர் தெற்கு மாவட்டப் பொறியாளர் அணி ஒன்றிய / நகர / பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல் மாவட்டப் பொறுப்பாளர் டி.பழனிவேல் தலைமையில் நடைபெற உள்ளது.

இதில் பொறியாளர் அணிக்கு தஞ்சாவூர் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய / நகர / பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு QR CODE மூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாள் : (22.03.2025 - சனிக்கிழமை) நேரம் : காலை 10.00 மணிக்கு

இடம் : தஞ்சை தெற்கு மாவட்டக் கழக அலுவலகம், சீனிவாசபுரம், காசாங்குளம், பட்டுக்கோட்டை.

**எஸ்.கே.பி.கருணா**
மாநிலச் செயலாளர்
தி.மு.க. பொறியாளர் அணி.


‘திராவிடியன் ஸ்டாக்’ பதிப்பகம் வெளியிடும்

# ‘கலைஞரின் திருக்குறள் உரை’ நூல் வெளியீட்டு விழா!

## அமைச்சர் கோ.வி.செழியன் - நா.எழிலன் எம்.எல்.ஏ. - ஆழி செந்தில்நாதன் சிறப்புரை!

சென்னை, மார்ச்.20-

‘திராவிடியன் ஸ்டாக்’ பதிப்பகம் சார்பில் ‘கலைஞரின் திருக்குறள் உரை’ நூல் வெளியீட்டு விழா சென்னை அன்பகத்தில் நடைபெறுகிறது.

சென்னை, அன்பகத்தில் ‘திராவிடியன் ஸ்டாக்’ பதிப்பகம் சார்பில் ‘கலைஞரின் திருக்குறள் உரை’ நூல் வெளியீட்டு விழா 22.3.2025 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறுகிறது.

இந்நூலை உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் வெளியிட்டு சிறப்புரை ஆற்றுகிறார்.

மேலும் மருத்துவர் நா. எழிலன் எம்.எல்.ஏ., மூத்த பத்திரிகையாளர் ஆழி செந்தில் நாதன் ஆகியோரும் இதில் உரையாற்றுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் யாழ் திலீபன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

மேலும் ஊடகவியலாளர்கள் மைனர், மில்ட்டன், கரிகாலன் மற்றும் இந்திரகுமார் தேரடி ஆகியோர் இதில் கலந்து கொள்கிறார்கள்.

நிகழ்ச்சித் தொகுப்பை ப்ரியதர்ஷினி கோபால் வழங்க, லஷிதா கௌதம் நன்றியுரை ஆற்றுகிறார்.

பெண்களுக்கும் தாய்மார்களுக்கும் – குழந்தைகளுக்கும்

# ஊட்டச்சத்தினை உறுதி செய்யும் திட்டம்!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் பி.கீதாஜீவன் தகவல்!

சென்னை, மார்ச். 19-

சட்டப்பேரவையில் பா.ஜ.க. உறுப்பினர் வானதி சீனிவாசன் பேசும் போது அமைச்சர் கீதா ஜீவன் குறுக்கீட்டு தமிழ்நாட்டில் பெண்களுக்காக ஊட்டச்சத்தை உறுதி செய்யும் வகையில் திட்டம் செயல்படுத்தி வருகிறது என்று குறிப்பிட்டார்.

அமைச்சர் பி.கீதாஜீவன் பேசியதாவது:

முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசின் திட்டமான Poshan Abhiyaan-ஐவிடக் கூடுதலாகவும், தனியாகவும் ஊட்டச்சத்தினை உறுதி செய்கின்ற திட்டம் தமிழ்நாடு



அரசில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, கர்ப்பிணிப் பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், எடை குறைவாகப் பிறந்த குழந்தைகளின் பாலூட்டும் தாய்மார்களுக்கும் என்று செய்யப்பட்டு வருகிறது. உறுப்பினர் அவர்கள் சொல்வதுஒட்டுமொத்தமாக ஒரு விழிப்புணர்வு செய்து கொண்டேதான் இருக்கிறோம். ஏனெனில், பிள்ளைகள் நம் குடும்பத்திலேயே நாம் check செய்து பார்த்தால் தெரியும். பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும், சிறு குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து குறைபாடு இருக்கிறது. காரணம், அவர்களுடைய food habits. அந்த பழக்கவழக்கங்கள் இருப்பதால் தொடர்ந்து awareness செய்து கொண்டிருக்கிறோம். எல்லோரும் இணைந்து செய்தால் நிச்சயமாக ஒரு சமூக மாற்றமே உருவாகும். அப்போதுதான் பெண்கள் மற்றும் குழந்தைகளினுடைய ஊட்டச்சத்தை நாம் நிலைநிறுத்திட முடியும். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூடுதலாக இதில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஊட்டச்சத்து குறைபாடில்லா தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்று நம்முடைய அரசும், இந்தத் துறையும் செய்து வருகிறது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கீதாஜீவன் பதிலளித்துப் பேசினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ப. சுப்பிரமணியன்**

**மார்ச் 20 (2002)**



கழகம் துவங்கிய காலத்தில் கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, தனது பகுதியில் அறிஞர் அண்ணா பெயரில் படிப்பகம் நடத்தியவர்.

நெல்லிக்குப்பம் 4வது வார்டு கழகச் செயலாளராகவும், அதனைத் தொடர்ந்து 25 ஆண்டு காலம் நகர துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

நெல்லிக்குப்பம் நகர்மன்றத் துணைத் தலைவராக பொறுப்பு வகித்து, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**